## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## IA 2 of 2025 in OS. 145/2025

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 25.02.2026 | | |
| பெயர்: | முகிலன்<br>(RW–1 Chief ) | தகப்பனார் பெயர்: | செல்வராஜ் |
| கிராமம்: | சின்னப்பெருந்தோட்டம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | VAO, தென்னாம்பட்டினம் | வயது : | 34/2026 |

<u>**முதல் விசாரணை : 25.02.2026**</u>

நான் இவ்வழக்கின் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். நான் தென்னாம்பட்டினம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்திருக்கிறேன். கிராம முழு வரைபடம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட உண்மை நகல் **சா.சா.1** ஆகும். அதில் 6 உட்கிராமங்கள் அடங்கியது. தென்னாம்பட்டினம், மார்த்தாம்பட்டினம், கீழமூவர்க்கரை, மேலமூவர்க்கரை, அண்ணப்பன்பேட்டை, கோணயாம்பட்டினம், வடக்குவெளி ஆகியவை ஆகும்.

வடக்குவெளியில் உள்ள புல எண்கள் 208, 209, 192, 193, 194, 202, 186, 187, 185 ஆகியவை ஆகும். அதில் நிறைய உட்பிரிவுகள் உள்ளன. புல எண். 202/4A9 சீத்தாலெட்சுமி பெயரில் உள்ளது. அதற்கான அடங்கல் கணக்கு அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **சா.சா.2** ஆகும். சீத்தாலெட்சுமி பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்கிறேன். பட்டா எண் என்பது 1272 ஆகும். அந்த

பட்டா **சா.சா.3** ஆகும். மனுதாரர் சீத்தாலெட்சுமிக்கு தென்னாம்பட்டினம் கிராமத்தில் புல எண்கள். 194/1B2, 194/5D2 சொந்தமானது ஆகும்.

கிராம வரைபடத்தின் வடக்குவெளி சம்மந்தப்பட்ட புல எண்களில் சாலைகளோ, வாய்க்கால்களோ காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை, ஆனால் குளம் மட்டும் உள்ளது. அந்த குளம் சர்வே எண்.202/3A1, 202/3A2களில் உள்ளது. கிராம புல எண். 202க்கான வரைபடம் **சா.சா.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த குளமானது கோவிந்தராசு, கண்ணையன் நாடார், ஏழுமலை, தையல்நாயகி, அண்ணாதுரை ஆகியோர் பெயரில் உள்ளது.

சர்வே எண். 194க்கான புல வரைபடம் தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் **சா.சா.5** ஆகும். புல எண்.194ல் புஞ்சை நிலம், நஞ்சை நிலம், மனைகட்டு உள்ளன, வீடுகள் சுமார் 8 உள்ளன. மேற்படி வீடுகளுக்கு செல்லக்கூடிய சாலை கிராம வரைபடத்தில் காட்டப்படவில்லை. ஆனால் பூமியில் உள்ளது. புல எண்கள் 202 மற்றும் 194 ஆகியவற்றில் யார் யார் உரிமையாளர் என்பதை காட்டுவதற்கான சான்று கொடுத்துள்ளேன். அந்த சான்று **சா.சா.6** ஆகும். மேற்படி சா.சா.6 ல் பாசன கண்ணியும், தார் சாலையும் காட்டியுள்ளேன். மேற்படி சாலையும், பாசன கண்ணியும் சா.சா.6ல் உள்ள புல எண்கள் வழியாக தான் செல்கிறது.

புல எண்கள் 194 மற்றும் 202க்கான அ பதிவேடு தாக்கல் செய்கிறேன். அ பதிவேட்டின் சான்றிட்ட நகல் **சா.சா.7** ஆகும். மேற்படி கிராமத்தில் சாலைகள் மற்றும் வாய்க்கால்கள் பயன்பாட்டில் இருந்தும் வரைபடத்தில் மற்றும் வருவாய் ஆவணங்களில், அவை காட்டப்படவில்லை.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.